**செய்தி வெளியீடு எண்: 789** **நாள்: 13.11.2019**

**செய்தி வெளியீடு**

பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் 131ஆவது பிறந்தநாளை முன்னிட்டு தமிழக அரசின் சார்பில், மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. பன்வாரிலால் புரோகித் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் ஆகியோர், சென்னை, கிண்டி கத்திப்பாரா சந்திப்பில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலையின் கீழ் அலங்கரித்து வைக்கப்படவுள்ள திருவுருவப் படத்திற்கு நாளை(14.11.2019) காலை 10.00 மணியளவில் மலர் தூவி மரியாதை செலுத்தவுள்ளார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் செயல்படும் மாண்புமிகு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் தலைமையிலான அரசு, தமிழ்ச் சான்றோர்கள், விடுதலைப் போராட்ட தியாகிகள் மற்றும் தலைவர்கள் ஆகியோரை பெருமைப்படுத்தும் வகையில், அன்னார்களது பிறந்தநாளன்று தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தி, விழா கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில், பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் பிறந்த தினமான நவம்பர் 14ஆம் நாள், ஒவ்வொரு ஆண்டும் அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இந்திய சுதந்திர போராட்டத்தின் முன்னணி தலைவர்களில் ஒருவரான ஜவஹர்லால் நேரு அவர்கள், உத்திரபிரதேச மாநிலம் அலகாபாத்தில் மோதிலால் நேரு– சுவரூப ராணி அம்மையார் தம்பதியருக்கு 14.11.1889 அன்று மகனாகப் பிறந்தார்.

1947ஆம் ஆண்டு, ஆகஸ்ட் 15ஆம் நாள் இந்தியா ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை பெற்றபோது, சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமராக பதவியேற்று, 1947ஆம் ஆண்டு முதல் 1964ஆம் ஆண்டு வரை இந்தியாவை வழிநடத்தியவர் ஜவஹர்லால் நேரு ஆவார். அணி சேரா இயக்கத்தை உருவாக்கியவரில் ஒருவராகவும், சுதந்திரப் போராட்ட வீரராகவும், “நவீன இந்தியாவின் சிற்பி” எனவும் ஜவஹர்லால் நேரு அவர்கள் அழைக்கப்பட்டார்.

ஜவஹர்லால் நேரு அவர்கள் வாழ்நாள் முழுவதும் குழந்தைகள் மற்றும் இளையவர்களின் நலம், கல்வி மற்றும் வளர்ச்சிக்காக அக்கறையுடன் பாடுபட்டதை நினைவுபடுத்தும் வகையில் இந்தியா முழுவதும் அன்னாரது பிறந்தநாள் “குழந்தைகள் தினமாக” கொண்டாடப்படுகிறது.

இந்தியக் குழந்தைகளால் "நேரு மாமா" என்று அன்புடன் அழைக்கப்பட்ட ஜவஹர்லால் நேரு அவர்கள் 1964ஆம் ஆண்டு மே மாதம் 27ஆம் நாள் உடல்நலக்குறைவால் இயற்கை எய்தினார்.

பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் 131ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, தமிழக அரசின் சார்பில் சென்னை, கிண்டி கத்திப்பாரா சந்திப்பில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலையின் கீழ் அலங்கரித்து வைக்கப்படவுள்ள திருவுருவப் படத்திற்கு நாளை(14.11.2019) காலை 10.00 மணியளவில் மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வாரியத்தலைவர்கள், கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் சீர்மிகு பெருமக்கள் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தவுள்ளார்கள்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**